செ.வெ.எண்.38/பிப்ரவரி நாள் : 25.02.2020

# பத்திரிக்கைச் செய்தி

தமிழ்நாடு மாநில ஊரக / நகர்புற வாழ்வாதார இயக்கம் மற்றும்
மாவட்ட வேலை வாய்ப்பு மற்றும் தொழில் நெறி வழிகாட்டி மையம்,

## இளைஞர்களுக்கான மாபெரும் வேலைவாய்ப்பு முகாம்

தருமபுரி மாவட்டத்தில், தமிழ்நாடு மாநில ஊரக / நகர்புற வாழ்வாதார இயக்கம் மற்றும் மாவட்ட வேலை வாய்ப்பு மற்றும் தொழில் நெறி வழிகாட்டி மையம் இணைந்து நடத்தும் இளைஞர்களுக்கான வேலை வாய்ப்பு முகாம் மற்றும் வேலை வாய்ப்புடன் கூடிய திறன் மேம்பாட்டு பயிற்சி முகாம் அரசு கலை கல்லூரி தருமபுரியில் 29.02.2020 அன்று காலை 9.00 மணி முதல் மாலை 3.00 மணி வரை நடைபெறுகிறது.

இதில் 5-ம் வகுப்பு முதல் பட்டப்படிப்பு, பட்டயப்படிப்பு வரை படித்த இளைஞர்கள் கலந்து கொண்டு தங்களுக்கு ஏற்ற வேலைவாய்ப்பினை தேர்வு செய்யலாம்.

மேலும், இந்த வேலை வாய்ப்பு முகாமில், வேலை வாய்ப்பு அளிக்கக்கூடிய அனைத்து தொழில் நிறுவனங்களும் கலந்துகொண்டு தங்களது நிறுவனங்களுக்கு தகுதியான ஆண்கள் / பெண்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் தேர்வு செய்ய உள்ளனர்.

எனவே, வேலைவாய்ப்பு பெற விருப்பமுள்ள ஆண்கள் / பெண்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் முகாமில் கலந்துகொண்டு பயனடையுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.எஸ்.மலர்விழி,இஆப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தருமபுரி.**